மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

16.08.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## சிறுவர்களுக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் சிக்கல்

பல்வேறு நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சந்துஷ் சேனாபதி இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். இதன்காரணமாக அத்தகைய மருந்துகளை வழங்கக்கூடிய தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் இருந்தால், தயவு செய்து உடனடியாக மருத்துவமனைக்கு தெரிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார். பல்வேறு நீண்ட கால நோய்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளை குறிப்பிட்ட காலத்துக்கு ஒரே மாதிரியாக கொடுக்காமல் இருந்தால் புற்றுநோய் போன்ற கடுமையான நோய்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மருந்துகளின் விலை மிக அதிகமாக இருப்பதாலும், நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே அவை தேவைப் படுவதாலும், அவற்றை வழங்குவதற்கு நன்கொடையாளர்கள் மிகக் குறைவாக இருப்பதால், இந்த மருந்துகளைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குடல் நோய்கள், இதய நோய்கள், நீரிழிவு நோய், மூட்டு நோய்கள் மற்றும் கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்ட நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு இந்த மருந்துகள் நீண்ட காலமாக தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய நியமனங்களுக்கு முன் அனுமதி பெறுவதற்கு குழு

அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளுக்கான புதிய நியமனங்களுக்கு முன் அனுமதி பெறுவதற்கு ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே.பெர்னான்டோ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விமானங்களுக்கான எரிபொருளை தனியாரிடமிருந்து கொள்வனவு?



பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் விமானங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியாவிட்டால், தனியார் துறையினருக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

02

## எரிபொருள் விலைசூத்திரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

இம்மாதம் விலைச்சூத்திரத்தின்படி எரிபொருள் விலையில் எவ்வித மாற்றமும் செய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு மாதமும் 1ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டிருந்தார். சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கூடினால் இங்கு எரிபொருள் விலை கூடும் , விலை குறைந்தால் இங்கு குறைக்கப்படும் அதுவே எரிபொருள் சூத்திரத்தின் அடிப்படை என விளக்கமளித்திருந்த அமைச்சர் தற்போது இது தொடர்பில் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது.


## மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் அனைத்து கட்டணங்களிலும் திருத்தம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் காலங்களில் ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் திருத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அனுமதி கோரியுள்ளது. அந்தவகையில் 2009ஆம் ஆண்டு இறுதியாக திருத்தம் செய்யப்பட்டு 13 வருடங்களின் பின்னர் இந்தக் கட்டணங்களுக்கான திருத்தங்கள் இடம்பெறவுள்ளதோடு இது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று சாரதி அனுமதிப்பத்திர திணைக்கள ஆணையாளர் வசந்த என். ஆரியரத்ன தெரிவித்துள்ளார். இப்பொழுது புதிய ஓட்டுநர் உரிமத்திற்கு ரூ.1, 700 மற்றும் ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்காததற்கு ஆண்டுக்கு ரூ.250 அபராதம் மட்டுமே அறவிடப்படுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளர்.

## நாட்டை வந்தடைந்த எரிவாயு கப்பல்

3,120 மெற்றிக் தொன் எரிவாயு ஏற்றிச் வந்த கப்பல் இன்று (16) காலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி, தற்போது எரிவாயு சரக்குகள் இறக்கப்பட்டு வருவதாக லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. எரிவாயு நிரப்பும் பணி ஆரம்பித்தவுடன் வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்யும் வகையில் மொத்த சந்தைக்கு எரிவாயு வெளியிடப்படும் என சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஸ்கொட்லாந்து பிரஜையின் மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு



நாட்டில் இருந்து தன்னை வெளியேற்றுவதற்கான தீர்மானத்துக்கு தடை விதிக்குமாறு கோரி ஸ் கொ ட் லா ந் து பிரஜை தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. ஸ்கொட்லாந்து சுற்றுலாப் பயணியான முயலடநபைா குசயளநச கடந்த 12 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குறித்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

தான் கோட்டா கோ கம போராட்டத்தில் கலந்து கொண்டிருந்ததாகவும், இதன் பின்னர் தனது வீசாவை இடைநிறுத்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தன்னிச்சையான தீர்மானத்தை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் குறித்த தீர்மானம் நியாயமற்றது என தீர்ப்பளிக்குமாறு அவர் கோரியிருந்தார். இந்த நிலையில், குறித்த மேன்முறையீட்டு மனு இன்று நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு குறைந்தபட்ச நியமனங்கள்

இலங்கையிலுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு தேசிய வழிகாட்டுதல் மற்றும் குறைந்தபட்ச நியமனங்களை அறிமுகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எதிர்கால சிறுவர்களுக்கான தரமான சேவைகளை வழங்குவதற்காக சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு, மாகாண மட்டத்தில் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் கொள்கைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

02

## மூன்று புதிய மருந்துகள் சந்தைக்கு

அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட மூன்று புதிய மருந்துகள் சந்தைக்கு வெளியிடப்பட்டுள்ளன. தைராக்ஸின் குறைபாட்டிற்கான மருந்தும், வாயு அமிலத்தன்மைக்கான மருந்தும் மற்றும் வலி நிவாரணி மருந்துமே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இரத்மலானை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபன வளாகத்தில் நேற்று(திங்கட்கிழமை) இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இந்த விடயத்தினை தெரிவித்திருந்தார்.

## அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது. இது தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து உப வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மருத்துவ மற்றும் இணை சுகாதார பீடங்களின் செயற்பாடுகள் தற்போதும் இடம்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார். ஏனைய பீடங்களை சேர்ந்த சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலேயே தங்கியிருந்தும், மேலும் சிலர் வீடுகளுக்குச் சென்றும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமைச்சு பதவிகளை வழங்குமாறு பரிந்துரை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 மாவட்டத் தலைவர்களுக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பரிந்துரை செய்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் சர்வகட்சி அரசாங்கத்திற்குள் இணையாத காரணத்தினாலேயே இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சிலருக்கு தற்போதைய அமைச்சரவையில் தற்காலிகமாக அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களைத் தவிர எஸ்.எம்.சந்ரசேன, பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்நாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு உள்ளடங்குவதாக கூறப்படுகிறது. எனினும், குறித்த பட்டியலுக்குள் மாத்தறை மாவட்ட தலைவர் டலஸ் அழகப்பெருமவின் பெயர் உள்வாங்கப்படவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்ட தலைவர் சமல் ராஜபக்ஷ அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கமாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

## நாளை முதல் நெல் கொள்வனவு

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நாளை (17) முதல் நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒரு கிலோகிராம் நாட்டு நெல் : ரூ. 120, சம்பா நெல்: ரூ. 125, கீரி சம்பா நெல்: ரூ. 130 இற்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சந்தையில் ஒரு கிலோ நெல்லின் விலை 90 ரூபாவிலும் குறைவாக உள்ளதாக, விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ள நிலையில், அவர்களது குறைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நியமிக்கப்பட்ட உபகுழுவின் ஆலோசனைக்கு அமைய நாளை (17) முதல் நெல்லை கொள்வனவு

02

## சீனாவின் கண்காணிப்பு கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது

சீனாவின் யுவான் வேங் – 5 **(Yuan Wang 5)** அதி தொழில்நுட்ப ஆய்வு, கண்காணிப்பு கப்பல் சற்று முன்னர் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் சீனக் கப்பல் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் 07 நாட்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இன்றைய தினம் நாட்டை வந்துள்ள இந்த கப்பல் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் நாட்டில் இருந்து வெளியேறவுள்ளதாகவும் குறித்த கப்பல் நிறுவனம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்துள்ளது.

சீனாவின் யுவான் வாங் 5 என்ற கப்பல் அந்நாட்டின் ஆராய்ச்சி மற்றும் ஆய்வு வகைக் கப்பலின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்ததோடு

02

## விமானங்களுக்கான எரிபொருளை...

பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், அமைச்சும் தேவையான அனுமதி மற்றும் வசதிகளை வழங்கினால் விமான எரிபொருளை தமது சொந்த செலவில் இலங்கைக்கு கொண்டு வந்து விநியோகிக்க தயார் என விமானத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இதுவரை இரண்டு கச்சா எண்ணெய் கப்பல்கள் இலங்கையை வந்தடைந்துள்ளதுடன், அவற்றின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக நாளொன்றுக்கு சுமார் 600 மெற்றிக் தொன் விமான எரிபொருளை வழங்க முடியும் என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக விமான எரிபொருளை விநியோகிக்க முடியும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு விமான நிறுவனத்திற்கும் தினசரி தேவைப்படும் எரிபொருளின் அளவு மற்றும் அதனை வழங்குவதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முறையான ஆய்வுடன் முறையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். குறிப்பாக சுற்றுலாப் பருவம் ஆரம்பமாகவுள்ள எதிர்வரும் மாதங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அதிகளவான விமானங்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தேவையான அளவு விமான எரிபொருளை தொடர்ச்சியாக வழங்குவது அவசியமானது எனவும் விமான நிறுவன பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு...

எனினும், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல் தொடர்பில் குறைபாடுகள் நிலவுவது குறித்து கண்டறியப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த தேசிய வழிகாட்டல்கள் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுவர் பராமரிப்பு துறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த துறைசார் நிபுணர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் குறைந்தபட்ச தரநிலைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுவர் மேம்பாட்டு மையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் குறைந்தபட்ச தரநிலைகளின் ஆரம்ப வரைவு தயாரிக்கும் பணி 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது சர்வதேச அளவில் இருக்கும் குறைந்தபட்ச தரநிலைகளை ஆய்வு செய்து ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர், பல கட்டங்களாக சிறுவர் மேம்பாடு, சட்டம், சுகாதாரம், சிறுவர் பாதுகாப்பு உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகள், இத்துறையில் உள்ள வல்லுநர்கள் மற்றும் சிறுவர் மேம்பாட்டு மையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளன. சிறுவர் பராமரிப்பு தொடர்பான ஆறு முக்கிய அம்சங்கள் தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர் மேம்பாட்டு மையங்களை நிறுவுதல் மற்றும் பதிவு செய்தல், சிறுவர் மேம்பாட்டு மையங்களின் பணியாளர்கள், நிறுவனமயமாக்கல் மற்றும் சிறுவர்களை மீண்டும் சமூக மயப்படுத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு தர நியமங்கள்,

சிறுவர் ஆரோக்கியம், நலன்புரி மற்றும் முறைப்பாடுகளைக் கையாளுதல், மையங்களை சோதனையிடல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை இந்த தரநிலைகளின் அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## சீனாவின் கண்காணிப்பு கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது

இந்த வகையான ஏழு கப்பல்களை சீனா கொண்டிருக்கின்றது. மேலும் இந்தவகைக் கப்பல்களில் செயற்கைக்கோள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஏவுதல், தகவல்தொடர்பாடல், மின்னணு வலையமைப்பு ஆகிய செயற்பாடுகளை கண்காணிக்கும் போன்ற வசதிகளை கொண்டுள்ளமையும் குறிப்பிடதக்கது.

## நாளை முதல் நெல் கொள்வனவு

செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக விவசாய அமைச்சர் இன்றையதினம் (16) தெரிவித்திருந்தார். 2022 ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப்பகுதியில் 5 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். நாட்டில் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை எனவும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பு இருப்பதாலும், சிறுபோக நெல் அறுவடை இருப்பதாலும், அரிசி தட்டுப்பாடு ஏற்பட எதிர்வரும் டிசம்பர் மாத அளவிலேயெ வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். எனவே அரிசி கையிருப்பை பேண அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்த நெல்லை, அரிசியாக மாற்றி குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று (16) முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விற்பனை செய்யப்படும் அரிசி கிலோ ஒன்றுக்கு 5 ரூபா விலைக் குறைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சந்தை நிலவரத்தை கருத்திற்கொண்டு அரிசியின் விலையை மேலும் குறைக்க வேண்டி ஏற்பட்டால் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு



வடமலை ராஜ்குமார்

100 நாட்கள் செயல்முனைவின் 16 ம் நாள் போராட்டம் வவுனியா மாவட்டத்தில் இன்று இடம்பெற்றது. "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 16 ம் நாள் போராட்டம் இன்று (16.08.2022) செவ்வாய்க் கிழமை வவுணியா மாவட்டத்தின் செட்டிக்குளம் நகரத்தில் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் செட்டிக்குளம் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், கிராமிய பெண்கள் குழுக்கள், இளைஞர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தங்களுக்கான சம உரிமைகள் கிடைக்கப் பெறவேண்டும், தங்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி நின்றனர். 17ம் நாள் போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் நாளை (17.08.2022) புதன் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது என்பதனை தெரியத்தருவதுடன், இப்போராட்த்தினை வலுசேர்க்க இணையுமாறு வேண்டுகின்றேன்.

# பேசாலை காட்டாஸ்பத்திரியில் மூன்று மீனவ வாடிகளும் மீன்பிடி உபகரணங்களும் தீக்கிரை



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் உள்ள பேசாலை கடற்தொழில் பிரிவிலுள்ள காட்டாஸ்பத்திரி பகுதியில் கடற்கரையோரத்தில் அமைகக்பட்டிருந்த மீன் வாடிகள் தீக்கிரையாகியுள்ளதுடன் பெருமதிமிக்க மீன்பிடி உபகரணங்களும் தீயில் நாசமாகியுள்ளன.

இவ் சம்பவம் தொடர்பாக தெரியவரவதாவது, ஞாயிற்றுக் கிழமை (14.08.2022) இரவு பேசாலை கடற்தொழில் பிரிவிலுள்ள காட்டாஸ்பத்திரி பகுதியில் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த மூன்று மீன் வாடிகளும் அதற்குள் இருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க கடற்தொழில் உபகரணங்கள் தீக்கிரையாகி ஊள்ளன. இவ் வாடிகளுக்குள் இருந்த 25 குதிரை வலு கொண்ட மூன்று வெளிக்கள இயந்திரங்களும் மற்றும் பெறுமதி மிக்க மீன்பிடி மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களளும் தீயினால் முற்று முழுதாக நாசமாகியுள்ளதாக பேசாலை பொலிசில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ் தீ வைப்பு நாசகார சம்பவமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது எனவும் பாதிப்படைந்தோர் பொலிசில் முறையீடு செய்துள்ளனர். இது தொடர்பாக பொலிசார் தீவிர விசாரனையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரதமர் கொண்டு வந்த விசித்திரமான அமைச்சரவைப் பத்திரம்

நாடு வக்குரோத்தான நேரத்திலும் பிரதமர் கொண்டு வந்த விசித்திரமான அமைச்சரவைப் பத்திரத்தை வெளிப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. இடைக்கால ஜனாதிபதியை நியமிப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பதில் பல்வேறு அனுகூலங்களும் சலுகைகளும் வழங்கப்பட்டன எனவும், அவற்றை ஊழல் மற்றும் முறைகேடுகள் என்று கூறலாம் எனவும், அந்த சலுகைகள் வடிவில் முறைகேடுகளை தொடர அமைச்சரவை பத்திரம் கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (16) தெரிவித்தார்.

நமது நாடு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பேரழிவை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில் தற்போதைய பிரதமரால் விசித்திரமான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மூலம் அடுத்த சில மாதங்களுக்கு இடைக்கால ஜனாதிபதி நியமனத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பல வசதிகளை தொடர்ந்தும் சில மாதங்களுக்கு நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இடைக்கால ஜனாதிபதி நியமனத்தில் தடையின்றி பங்கேற்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும், இந்த வசதி மேலும் தொடர்ந்து செயற்படுத்த அனுமதி வழங்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 5 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் வசதி, சாரதி வசதி, போக்குவரத்து வசதிகள் கூட செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களின் ஊட்டச்சத்து குறைபாடு வேகமாக அதிகரித்து வரும் நேரத்தில், அவர்களுக்கு ஊட்டச்சத்துச் சலுகைகள் வழங்குவதற்கு பதிலாக, இது போன்ற அரசியல் விளையாட்டுகள் அரங்கேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார். தேசிய மக்கள் பேரவையின் மகளிர் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் கூட்டம் இன்று (16) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றதோடு, இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டைக் கட்டியெழுப்பும் போர்வையில் மேற்கொள்ளப்படும் போலியான செயல்களுக்கு தான் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும், அரசாங்கத்தால் பாராளுமன்ற உறுப்பினர் ஏலமும் கூட நடத்தப்படுவதாகவும், இத்தகைய விடயங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், இந்த அரசியல் சூதாட்டத்திற்கு தான் தயாராக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# ஹெரோயின் மற்றும் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது




பாறுக் ஷிஹான்

ஹெரோயின் மற்றும் போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்தவரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து திங்கட்கிழமை (15) நள்ளிரவு கல்முனை காஸீம் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து 3 ரூபா 5000 போலிகள் உட்பட ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 100 மில்லிகிராம் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே நிசங்க மற்றும் பண்டார உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார பொலிஸ் கன்ஸ்டபிள் பிரபாத் வாகனச்சாரதி ஜயரட்ண இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் அமீருக்கு வரவேற்பு



( காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.எம்.எம்.அமீர் நேற்று(16) செவ்வாய்க்கிழமை கல்வி சார் உத்தியோகத்தர்களால் வரவேற்பளிக்கப்பட்டார். புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் அமீருக்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, உதவி கல்வி பணிப்பாளர் விரி.சகாதேவராஜா ஆகியோர் மாலை சூட்டினர். ஏனைய கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். அதன் பின்னர் கல்வி அபிவிருத்தி கூட்டம் நடைபெற்றது.

# புலம்பெயர் அமைப்புக்ளை பலவீனப்படுத்தவே பார பட்சமான தடை நீக்கம்

## வடக்கு மாகாணசபை முன்னாள் சபா குகதாஸ்



( வாஸ் கூஞ்ஞ )

தடை நீக்கத்தின் பின்னர் உள் நாட்டில் சிங்கள ஆட்சியாளர் பலரின் இனவாத கோரமான மன வெளிப்பாடுகள் வெளிக்கிம்பி உள்ளன அவை இனக் குரோத சிந்தனையில் அவர்கள் தொடர்ந்தும் இருப்பதை உறுதி செய்கின்றது. அத்துடன் இலங்கை ஆட்சியாளர்கள் பலவீனப்படுத்தி பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் பேரப்பலத்தை அழித்து விடுவார்கள் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை பலவீனம்படுத்தும் நோக்கிலே பாரபட்சமான முறையில் தடை நீக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. தடை நீக்கம் என்பது புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கு புதியவை அல்ல அத்துடன் இந்த தடை நீக்கம் நிரந்தரமானதும் அல்ல இதனை அத்தனை தமிழர் புலம்பெயர் அமைப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டும் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு கிடைத்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கும் நிரந்தர தடை நீக்கம் கிடைக்கும் அதுவரை மாறி மாறி வரும் சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் அரசியல் நலன்களுக்காக தடை போடுவார்கள் தடை நீக்குவார்கள்.

இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் சர்வதேச அரங்கில் தங்களை நம்ப வைப்பதற்கான செயற்பாடுகளை மேற் கொள்ளுதல் அதன் அடிப்படையில் தான் உள் நாட்டிற்குள் பல பிரச்சினைகள் தீர்க்க கூடியதாக இருக்கும் போது அவற்றுள் கரிசனை செலுத்தாது புலம்பெயர் அமைப்புக்களை தடை நீக்க முன் வந்துள்ளது. தடை நீக்கத்தின் பின்னர் உள் நாட்டில் சிங்கள ஆட்சியாளர் பலரின் இனவாத கோரமான மன வெளிப்பாடுகள் வெளிக்கிம்பி உள்ளன அவை இனக் குரோத சிந்தனையில் அவர்கள் தொடர்ந்தும் இருப்பதை உறுதி செய்கின்றது.

புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் ஒற்றுமையாக இருக்கும் வரை தான் பேரப்பலத்தை உறுதி செய்ய முடியும் இல்லாவிட்டால் இலங்கை ஆட்சியாளர்கள் பலவீனப்படுத்தி பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் பேரப்பலத்தை அழித்து விடுவார்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்ததை நல்ல பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் இதனை மறந்தால் சர்வதேச நீதிப் பொறிமுறை கால நீடிப்பு என்ற கட்டமைப்பில் தமிழ் மக்களுக்கு நீர்த்துப் போகும் அபாயத்தையே உருவாக்கும். பொருளாதார மீட்சியால் மட்டும் இலங்கையை நிரந்தர அமைதியான நாடாக மாற்றிவிட முடியாது இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை ராஜதந்திரமாக கொண்டு காய்நகர்த்த ஒற்றுமையாக முன்னெடுக்க புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் தயாராக வேண்டும்.

# கிண்ணியா கள்ளறப்பு விவசாயக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான ஜெயவிக்கிரம நேற்று(15)கிண்ணியா கள்ளறப்பு பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள காணிகளை பார்வையிட்டார். மேலும் அப்பகுதியிலுள்ள விவசாயக் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார்.

கள்ளறப்பு பிரதேசம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற காணியாகும். மாவட்ட அரசாங்க அதிபர் அப்பகுதி விவசாகளின் குறை நிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இவ்விஜயத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, வனவளத் திணைக்கள அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

# கிண்ணியா நகர சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான கருத்திட்டம் ஆரம்பித்து வைப்பு



(எப்.முபாரக் )

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட கட்டையாரு பொழுதுபோக்கு பூங்காவினுள் நிரந்தர வருமானம் தரக்கூடிய கருத்திட்டமான கொடுவா மீன் வளர்ப்பு திட்டம் ஒன்று நேற்று(15)கிண்ணியா நகர சபைத் தவிசாளரின் முயற்சியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.குறிப்பிட்ட இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவாக ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளதோடு, நிறுவனம் ஒன்று நான்கு இலட்சம் ரூபாயினை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் முகம்மட் நிவாஸ் தெரிவித்தார். இத்திட்டத்தின் மூலம் கிண்ணியா நகர சபையின் வருமானம் அதிகரிப்பதுடன் புதிய வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்த வழிசமைக்கும் என்பதில் எந்தவித சந்தேமுமில்லை எனவும் நகரபிதா தெரிவித்தார். குறிப்பிட்ட இந்நிகழ்வில் நகரசபையின் தவிசாளர், உறுப்பினர்கள் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மற்றும் நிறுவனத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் நகர சபையின் செயலாளர் உத்தியோகத்தர்கள்,ஊழியர்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். பங்கேற்றனர்.

# விளையாட்டு கழகங்களுக்கு உதைப்பந்தாட்ட பாதணிகள் வழங்கல்



(சர்ஜ/ன் லாபீர்)

மத்தியமுகாம் சவளக்கடை பிரதேசத்தில் உள்ள அமீர் அலி விளையாட்டுக் கழகம் மற்றும் சவளக்கடை றூல் பிரக்கஸ் உதைபந்தாட்ட அக்கடமிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸ ின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உதைப்பந்தாட்ட காலணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று(15) நாவிதன்வெளிபிரதேச சபை உறுப்பினர் எம்.பி நவாஸ் தலைமையில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள இராஜங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாதணிகளை வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ ரஜாப்தீன்,எம்.டி ரிபாஸ்,பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை பிராந்திய மீனவர்களின் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காண ஹரீஸ் எம்.பி. பேச்சு




(நூருல் /ஹுதா உமர், சர்ஜ/ன் லாபீர்)

அம்பாறை மாவட்ட மீனவர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் எதிர்கொள்ளும் எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினை தொடர்பிலும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதித்துள்ள விடயம் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்று திங்கட்கிழமை (15) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸின் பங்கெடுப்புடன் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மீனவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள விடயங்களை கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திர படகு மீனவர் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.எச்.எம் நஸீர், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரிசுக்கு எடுத்துரைத்தார். இதற்கமைவாக கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட 05 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேடமாக வாரத்தில் 07 நாட்களும் டீசலினை வரவழைத்து அதனை மீனவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமைப்படுத்தி வழங்குவற்கு ஆலோசிக்கப்பட்டதுடன் இது சம்மந்தமாக பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உடன் தீர்வு பெற்றுத் தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ் இதன்போது உறுதியளித்தார்.

இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிறிரஞ்சன், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நமது வரலாற்று ஆளுமைகள்' (பகுதி -1) நூல் வெளியீடு




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பிரபல எழுத்தாளரும், பன்னூலாசிரியரும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான கலாபூஷணம் ஸக்கியா ஸித்திக் பரீட் எழுதிய 'நமது வரலாற்று ஆளுமைகள்' (பகுதி –1) எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு – 10, தபால் தலைமை கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், கபீர் ஹாசிம், முஜிபுர் ரஹ்மான், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எஸ். எம்.மரிக்கார், அப்துல் ஹலீம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சபீக் ரஜாப்டீன், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஏ.எம். நஹியா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசாரப் பணிப்பாளர் இப்ராஹீம் அன்ஸார், மாத்தளை சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் புவாஜி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

நூல் பற்றிய ஆய்வுரையை டாக்டர் ரவூப் ஷெய்ன் நிகழ்த்துவதோடு, நூலின் முதல் பிரதியை மூஸான் இன்டர்நெஷனலின் தலைவர் முஸ்லிம் சலா/ஹுடீன் பெற்றுக் கொள்வார். நிகழ்வை வசந்தம் தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் முஹம்மட் இர்பான் தொகுத்து வழங்குவார்.

ஸாஹிராவை உருவாக்கிய உத்தமர்கள் (ஆவணநூல்), விடியலின் விழுதுகள் (சிறுகதைத்தொகுப்பு), இதயத்தின் ஓசைகள் (கவிதைத்தொகுப்பு), முதுசம் (பொன்மொழித் தொகுப்பு), பொதுஅறிவுத் தகவல் களஞ்சியம் மற்றும் இஸ்லாமிய தகவல் களஞ்சியம் என்று ஏற்கனவே 6 நூல்களைப் படைத்த நூலாசிரியர் ஸக்கியா, 7ஆவது நூலாக இந்நூலை வெளியிடவுள்ளார். அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ள இந்நிகழ்வில், விரும்புகின்றவர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

# பனை பொருள் ஊடான உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிநெறி



**ஹஸ்பர்**

திருகோணமலை ,தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்தினிபுர கிராமத்தில் பனை பொருள் ஊடான உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க குறித்த பயிற்சிநெறி நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் பனம் பொருள் கைப்பணியாளர் சங்க அங்கத்தவர்களுக்காக நேற்று (15) பத்தினிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் இடம் பெற்றது.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் குடும்ப வருமானத்தினை அதிகரிக்கும் பொருட்டு பிரம்பு சார் உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக இவ் இலவச பயிர்ச்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றன.குறித்த பகுதியில் பனை உற்பத்திசார் கைப்பணி பொருட்கள் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் நிலையமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தேசிய அருங்கலைப் பேரவையின் உதவி மாகாணப் பணிப்பாளர் பொன்கரன், கிராம சேவகர் நேசராஜ்குமார், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கரூபன் உட்பட பெண் தொழில் பனை உற்பத்தியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதாரத்திட்டம் கையளிப்பு



**பேரின்பராஜா சபேஷ்**

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கிராமத்தில் மிகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றிற்கு லண்டனை தளமாக கொண்டு இயங்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையினரால் வீடு உட்பட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதாரத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. களுவன்கேணி கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபைனரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை நிமிலேஸ்வரி குடும்பத்திற்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் கலந்து கொண்டு வீட்டினை பயனாளியிடம் கையளித்தார்.

ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்தனர் . வசிப்பதற்கான வீடு, வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், கோழிகள், தாறாக்கள், வளர்ப்பதற்கான நிரந்தரமான கூடு, தொழில் புரிவதற்காக துவிச்சக்கர வண்டி என்பன வழங்கப்பட்டன.

வீட்டு உரிமையாளருக்கு கடந்த காலத்தில் மீன்பிடித்தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக பெற்றப்பட்ட கடனினைச் செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபா பணமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிவில் பாதுகாப்பு படையினரால் சிரமதானம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

ஓட்டமாவடி கல்விக்கோட்டத்திற்குட்பட்ட அறபா நகர் முஹைதீன் அப்துல் காதர் வித்தியாலயத்தில் 14.08.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் சிரமதான நிகழ்வு இடன்பெற்றது. பாடசாலையின் அதிபர் ஏ.யூ.எம்.நளீம் (ஸலாமி) தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான பணியில் நாவலடி சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 10.08.2022ம் திகதி நாவலடி சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பொறுப்பாளர் ஏ.பி.எம்.கயஸிடம் பாடசாலை அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக குறித்த சிரமதானப்பணியினை சிவில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்டிருந்தனர். குறித்த சிரமதானப்பணியில் கலந்து கொண்ட சிவில் பாதுகாப்பு படையினருக்கும் அதற்கான அனுமதியினை வழங்கிய நாவலடி சிவில் பாதுகாப்புத் திணைக்களப் பொறுப்பாளர் ஏ.பி.எம். கயஸ் அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் நன்றி தெரிவித்தார்.

# விஷேட தேவையுடைய மாணவர் சாரணிய பயிற்றுவிப்பாளராக எம்.யூ.எம்.சனூஸ்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

விஷேட தேவையுடைய மாணவர்களுக்கு சாரணியர் பயிற்சிகளை வழங்கி சாரணிய திட்டத்தில் உள்வாங்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 விஷேட தேவையுடைய பாடசாலைகளிலிருந்து 25 ஆசிரியர்கள் தெரிவு பயிற்சியளிக்கப்பட்டனர். பயிற்சிநெறிக்காக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட காவத்தமுனை விஷேட தேவையுடையோர் பாடசாலையிலிருந்து எம்.யூ.எம்.சனூஸ் ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு லுஆஊயு நிலையத்தில் இரு நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சிநெறியில் மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு பிரதீபன் கலந்து கொண்டு பயிற்சிநெறியில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்ததுடன், விஷேட தேவையுடைய மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளராக காவத்தமுனை விஷேட பாடசாலை ஆசிரியர் எம்.யூ.எம்.சனூஸ் அவர்களுக்கான நியமனத்தினையும் வழங்கி வைத்தார். குறித்த நியமனத்தினைப் பெற்றுக்கொண்ட எம்.யூ.எம்.சனூஸ் ஆசிரியருக்கு காவத்தமுனை விஷேட பாடசாலை நிருவாகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

# தொட்டவத்தை அல்- பஹ்ரியா தேசிய பாடசாலை ‘மாவட்ட சம்பியன்’ பட்டத்துடன் விசேட சாதனை



களுத்துறை மாவட்ட கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட பிரிவுகளுக்கு கீழ் நடந்த உதைபந்தாட்ட போட்டிகளில் தொட்டவத்தை அல்–பஹ்ரியா தேசிய பாடசாலை அணி இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட சாம்பியன் பட்டத்தை சூடிக் கொண்டதுடன், மாகாண மட்ட போட்டிகளுக்கும் தெரிவாகியுள்ளது. இதே வேளை பாடசாலையின் 16 வயதுக்கு கீழ்ப்பட்ட அணி கால் இறுதி போட்டி வரை முன்னேரி இருந்தது, இருப்பினும் கடும் போட்டிகளுக்கு மத்தியில் அரை இறுதி வாய்ப்பினை தவறவிட்டது.

இச்சந்தர்ப்பத்தில், பாடசாலையின் சகல வயதுகளுக்கு கீழ்ப்பட்ட அணிகளுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், இதற்காக பங்களித்த அதிபர், ஆசிரியர்கள், அணியின் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (**SDC**),பழைய மாணவர்கள் சங்கம் (**OBA**), பழைய மாணவிகள் சங்கம் (**OGA**), பெற்றோர்கள், நலன்விரும்பிகள் சகலருக்கும் நன்றிகள்.

# மெரிட் கோட்டா முறையில் அதிகமானவர்களை பல்கலைக்கு அனுப்ப முயற்சிக்க வேண்டும்



**த.சுபேசன்**

மெரிட் கோட்டாவில் அதிக மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பும் போது எமக்கான டிஸ்ரிக் கோட்டா(மாவட்ட கோட்டா) மேலதிகமாக கிடைக்கும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.கடந்த 14ஃ08 ஞாயிற்றுக்கிழமை யாழ்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தமர்வினை ஆரம்பித்து வைத்த வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

நாம் ஓர் காலத்தில் கல்வி சார்ந்த சமூகமாக பெருமைப்பட்டுக் கொண்டவர்கள். கல்வி ஊடாக பல சாதனைகளையும் – பதவி நிலைகளையும் வகித்தோம். ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.அந்த நிலைமை மாற வேண்டும் எமது சந்ததி கல்வி ஊடாக சிறந்து விளங்க வேண்டும்.அதனூடாக மட்டுமே எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும்.இன்று இளைஞர்கள் போதைவஸ்து, சமூக வலைத்தளங்கள் என பல காரணிகளால் வழிதவறிப் போகின்றனர்.இந்த தடைகளையும் தாண்டி வாழ்வில் வெற்றி பெற கல்வியை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இறுகப் பற்றினால் கல்வி நிச்சயமாக எம்மை கரை சேர்க்கும். தீவக கல்வி வலயம் அடைவு மட்டத்தில் கடைசி கல்வி வலயமாக காணப்படுகிறது.அவர்களை இந்த நிலைமையில் இருந்து முன்னேற்ற தொடர் பயிற்சிகளை வழங்க வேண்டும். டிஸ்ரிக் கோட்டா முறையில் இருந்து மெரிட் கோட்டா முறையில் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய திறமை உள்ள மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்தி அவர்களை மெரிட் கோட்டா முறையில் பல்கலைக்கழகம் அனுப்ப வேண்டும்.

அவ்வாறு மெரிட் கோட்டா முறையில் அதிக திறமை உள்ள மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பும் போது எமக்கான மாவட்ட கோட்டா மேலதிகமாகக் கிடைக்கும்.இந்த நடவடிக்கை ஊடாக அதிகமான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப முடியும்.



இன்று எமது மாகாண அரச திணைக்களங்களில் எமது மொழி பேசாத வெளி மாகாணத்தவர்கள் பணிக்கு வருகின்றனர்.இதனை தவிர்க்க வேண்டுமானால் எம்மவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி உரிய தகுதியைப் பெற வேண்டும்.வாய்ப்புக்கள் பல தடவைகள் வராது.எனவே கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தி வாய்ப்பினை அதிஷ்டமாக மாற்றிக்கொள்ள வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பஷீரை கிழக்கின் ஆளுனராக நியமிக்க வேண்டும்



**நூருள் /ஹுதா உமர்**

கிழக்கு மாகாண ஆளுனராக முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத்தை நியமனம் செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை மக்கள் தேசிய கட்சி கோரி உள்ளது. இலங்கை மக்கள் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் என். விஷ்ணுகாந்தன் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு இது தொடர்பாக பேசினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கும் போது, கிழக்கு மாகாண ஆளுனராக கிழக்கு மண்ணையும், இங்கு உள்ள மக்களையும் நேசிக்கின்ற கனவான் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும். அதே போல அவர் இங்கு வாழ்கின்ற அனைத்து இன மக்களாலும் நேசிக்கப்படுபவராக இருத்தலும் வேண்டும். எமது கட்சியை பொறுத்த வரை கிழக்கு மாகாண ஆளுனர் பதவியை அலங்கரிப்பதற்கு உண்மையிலேயே மிக பொருத்தமானவர் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத். இவர் எல்லா இன மக்களையும் அரவணைத்து நடப்பவர். எல்லா இன மக்களாலும் நேசிக்கப்படுபடுபவர். குறிப்பாக தமிழ் – முஸ்லிம் உறவுக்கு பாலமாக விளங்குபவர். தமிழ் மக்கள் மூலமாக முதன்முதல் பாராளுமன்றம் சென்றவர். தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்கு எப்போதும் குறுக்கே நிற்காதவர்.

இவர் கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்படுகின்ற பட்சத்தில் இம்மாகாணத்தில் இன நல்லிணக்கம் செழிக்கும். குறிப்பாக தமிழ் – முஸ்லிம் உறவு மேம்படும். பாராளுமன்ற அரசியலில் மிக நீண்ட அனுபவம் உடைய இவரின் தெளிந்த சிந்தனை, தீர்க்கதரிசனம், தூர நோக்கு ஆகியவற்றின் மூலம் கிழக்கு மாகாணம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் பெறுவது திண்ணம். இவர் கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்படுவதை எந்த மக்களும் ஆட்சேபிக்க போவதில்லை. எனவே ஆளுனராக இவரையே நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோருகின்றோம்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தற்போது கொண்டு இருக்காத அரசியல் கட்சிகளையும் சர்வ கட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி இணைத்து கொண்டு பயணிக்க வேண்டும் என்பது எமது பேரவா. பசீர் சேகு தாவூத்துக்கு வழங்கப்படுகின்ற கிழக்கு மாகாண ஆளுனர் பதவி மூலம் எமது பேரவா நிறைவேற தொடங்கும் என்று விசுவாசிக்கின்றோம். இதுவே எமது கட்சியின் சிபாரிசாகும் என்று தெரிவித்தார்.

# புனித மரியாள் பேராலய வருடாந்த திருவிழா
# கொடியிறக்கத்துடன் நிறைவு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தொன்மைவாய்த அதி சிறப்புவாய்ந்த கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றாய் திகழ்ந்துவரும் புளியந்தீவு – புனித மரியாள் பேராலயத்தின் 214 வது வருடாந்த திருவிழா நேற்று (15) திகதி திங்கட்கிழமை பெருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றுள்ளது. கடந்த 06.08.2022 திகதி மாலை பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி. ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார் தலைமையில் திருக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து நவநாற்கால வழிபாடுகள் இடம்பெற்று, அன்னையின் திருச்செருப பவணி, நற்கருணை ஆசீர் என்பன இடம்பெற்றுள்ளது. 15.08.2022 திகதி இடம்பெற்ற ஆலய பெருவிழா கூட்டுத்திருப்பலியினை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், பெருவிழா நிறைவில் திருக்கொடி இறக்கப்பட்டு, அன்னையின் ஆசீருடன் இவ்வாண்டிற்கான திருவிழா நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீர்த்தகிரியார்' வீர விருது பெற்றார்
# சிரேஷ்ட எழுத்தாளர் ஸக்கியா ஸித்தீக் பரீட்




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

மாவனெல்லையைச் சேர்ந்த சிரேஷ்ட எழுத்தாளரும் பன்னூலாசிரியரும் ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி ஸக்கியா ஸித்தீக் பரீட் இந்தியாவின் 'தீர்த்தகிரியார்' வீர விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சுதந்திர தின (ஆகஸ்ட் – 15) விழாவினை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி ஃ பவுண்டேஷன், திருச்சிராப்பள்ளி வீரமங்கை சமூக சிந்தனை அறக்கட்டளை ஆகிய அமைப்புகள் இணைந்து நடாத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான "தேசத்தின் வீர விருதுகள்– 2022" வழங்கும் நிகழ்வில் எழுத்துத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக, இலங்கையிலிருந்து சிரேஷ்ட எழுத்தாளரும் பன்னூலாசிரியருமான திருமதி ஸக்கியா ஸித்தீக் பரீட் இந்தியாவின் 'தீர்த்தகிரியார்' வீர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து கலந்து கொண்டவர்களில் 6 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர். அந்த 6 பேரில் ஒருவராக திருமதி ஸக்கியா ஸித்திக் பரீட் உம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எழுத்துத்துறையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, ஒரு நிமிடம் கூட வீணாக்காமல் தன் வாழ்நாள் பூராகவும் எழுதிவரும் இவருக்கு இவ்விருது கிடைக்கப்பெற்றது சாலப் பொருத்தம். இவரை வாழ்த்துவதில் இலங்கை வாழ் இலக்கிய சமூகம் மாத்திரமல்ல, எமது நாடும் பெருமை கொள்கிறது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய
## பிரதிபொலிஸ்மா அதிபராக சரத்குமார நியமனம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய பிரதிபொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சரத்குமார நேற்று(15) திகதி காலை மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் தனது கடமைகளை பெறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸாரின் விசேட அணிவகுப்பு மரியாதையை தொடர்ந்து மதவழிபாடுகளிலும் ஈடுபட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சுபவேளையில் கையொப்பமிட்டு தனது கடமையினை பெறுப்பேற்றுக்கொண்டுள்ளார். புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் களுத்துறையில் பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பிரதிப்பொலிஸ்மா அத்தியட்சகர் எம்.சுமதிபால, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி எட்டியாராச்சி உட்பட சிரேஸ்ட பொலிஸ் அதிகாரகளும் திருமதி சறத்குமார ஆகியோரும் குறித்த பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தங்கப்பதக்கத்தினை வென்ற மட்டக்களப்பு கல்லூரி மாணவி



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

இலங்கை உயர் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா மாதிரிகளுக்கான பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (**BMICH**) கடந்த 12.08.2022 திகதி தொடக்கம் 14.08.2022 திகதி வரை நடைபெற்றுள்ளது. இதன்போது கடந்த 12.08.2022 திகதி இடம்பெற்ற நிகழ்வில் டிப்ளோமா கற்றை நெறிக்கான பட்டமளிப்பு நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு உயர் தொழில் நுட்பக் கல்லூரி (**Advanced Technological Institute - Batticaloa**) புதிய சாதனை ஒன்றினை புரிந்துள்ளது. இலங்கை உயர் தேசிய டிப்ளோமா வரலாற்றில் **HNDE** பிரிவில் முதலாவது சாதனையாக முதல் தங்கப்பதக்கத்தினை மட்டக்களப்பு கல்லூரியினை சேர்ந்த மாணவி பவினா மோகனராஜ் பெற்றுக் கொண்டுத்துள்ளார்.

இதுவே அகில இலங்கை ரீதியில் குறித்த கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் முதல் தங்கப்பதக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இம் மாணவியின் இச் சாதனை அம் மாணவிக்கும், கல்லூரிக்கும் மாத்திரமன்றி மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமையினையும், கௌரவத்தினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதன் போது மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியில் இருந்து மாத்திரம் **Higher National Diploma in - Information Technology-HNDIT, Accountancy-HNDA, English -HNDE, Tourism and Hospitality Management -HNDTHM}** ஆகிய கற்கை நெறிகளினை வெற்றிகரமாக நிறைவு செய்த சுமார் 400 மாணவர்கள் இவ்வருடம் பட்டம் பெற்றுளதுடன் அகில இலங்கை ரீதியில் மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி (**ATI**) முன்னிலை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு உயர் தேசிய டிப்ளோமா கற்கை நிறுவகமானது 1992ல் ஆரம்பிக்கப்பட்டு 2015ல் தரமுயர்த்தப்பட்டு ஆரையம்பதி கோவில்குளம் பகுதியில் மிகவும் சிறப்பான முறையில் கல்லூரி முதல்வர் செல்வரெத்தினம் ஜெயபாலன் அவர்களால் கட்டமைக்கப்பட்டு, சிறந்த வழிகாட்டுதல்களுடன் இன்றுவரை பல மாணவர்களின் எதிர்காலத்திற்கு சிறப்பாக வித்திட்டுள்ளது என்றால் மிகையாகாது.

# உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்"
# 6 வது இரத்ததான முகாம்




**(எஸ்.எஸ். அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு ஸலாமா பௌன்டேஷனின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் 6 வது தடவையாக மேற்கொள்ளப்படும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 17.08.2022 திகதி புதன் கிழமை காலை 8.00 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது. மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாயலில் இடம்பெறவுள்ள குறித்த இரத்ததான முகாமிற்கு குருதிக்கொடையாளர்களை அன்புடன் அழைக்கின்றனர் மட்டக்களப்பு ஸலாமா பௌன்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டாளர்கள்.